சார்பு நீதிமன்றம், நாங்குநேரி

முன்னிலை:- திரு. P.S. ரஷ்கின் ராஜ், B.A., L.L.M.,

சார்பு நீதிபதி, நாங்குநேரி

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ம் நாள் திங்கள்கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண்.195/2020

மற்றும்

குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு

(வள்ளியூர் சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.46/2016)

(CNR NO.TNTL27001247-2020)

1) முத்துபாண்டியன்

2) கிருஷ்ணகுமார்

3) ஜெயபிரகாஷ்

4) மூர்த்தி

5) தங்கமணி

6) கிருஷ்ணமூர்த்தி

7) மகேந்திரன்

8) விஜயகுமார்

9) சிவகுமார்

10) கோபி

11) தாஸ்குமார்

12) சுந்தர் ராஜ்

13) பூதலிங்கம் பிள்ளை

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:34:29 +0530

14) ஷீபா

15) சீதாராமன்

16) வெங்கடேஷ்

17) ராமசுந்தரம்

18) பத்மநாபபிள்ளை

19) முத்து

20) மெஹருநிஷா

21) ரமேஷ்

22) முத்துராஜ்

23) சந்திரகலா

24) கலைவாணி

25) ஜோதி

26) தீபா

27) பாண்டித்துரை

28) விஜயன்

29) சுடலை முத்துவேல்

30) திருநாவுக்கரசு

31) ஜோசப்ராஜன்

32) தங்கம்மாள்

33) மகாவிஷ்ணு

... மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்

// எதிர் //

1) சுந்தரகனி

2) செல்வி ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:34:35 +0530

இந்த மேல்முறையீடானது, நான்குநேரி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அசல் வழக்கு எண்.222/2007-ல், 27.07.2016 ம் தேதியிட்டு வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு

1) சுந்தரகனி

2) செல்வி ...குறுக்கு மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்

// எதிர் //

1) முத்துபாண்டியன்

2) கிருஷ்ணகுமார்

3) ஜெயபிரகாஷ்

4) மூர்த்தி

5) தங்கமணி

6) கிருஷ்ணமூர்த்தி

7) மகேந்திரன்

8) விஜயகுமார்

9) சிவகுமார்

10) கோபி

11) தாஸ்குமார்

12) சுந்தர் ராஜ்

13) பூதலிங்கம் பிள்ளை

14) ஷீபா

15) சீதாராமன்

16) வெங்கடேஷ்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:34:42 +0530

17) ராமசுந்தரம்

18) பத்மநாபபிள்ளை

19) முத்து

20) மெஹருநிஷா

21) ரமேஷ்

22) முத்துராஜ்

23) சந்திரகலா

24) கலைவாணி

25) ஜோதி

26) தீபா

27) பாண்டித்துரை

28) விஜயன்

29) சுடலை முத்துவேல்

30) திருநாவுக்கரசு

31) ஜோசப்ராஜன்

32) தங்கம்மாள்

33) மகாவிஷ்ணு ... குறுக்கு எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள்

இந்த குறுக்கு மேல்முறையீடானது, நான்குநேரி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அசல் வழக்கு எண்.222/2007-ல், 27.07.2016 ம் தேதியிட்டு வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கீழமை நீதிமன்ற தரப்பினர் விவரம்

1) சுந்தரகனி

2) செல்வி ... வாதிகள்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:34:49 +0530

// எதிர் //

1) முத்துபாண்டியன்

2) கிருஷ்ணகுமார் *

3) ஜெயபிரகாஷ்

4) மூர்த்தி

5) தங்கமணி

6) கிருஷ்ணமூர்த்தி

7) மகேந்திரன்

8) விஜயகுமார்

9) சிவகுமார்

10) கோபி

11) தாஸ்குமார்

12) சுந்தர் ராஜ்

13) பூதலிங்கம் பிள்ளை

14) ஷீபா

15) சீதாராமன்

16) வெங்கடேஷ்

17) ராமசுந்தரம்

18) பத்மநாபபிள்ளை

19) முத்து

20) மெஹருநிஷா

21) ரமேஷ்

22) முத்துராஜ்

23) சந்திரகலா

24) கலைவாணி

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:34:56 +0530

25) ஜோதி

26) தீபா

27) பாண்டித்துரை

28) விஜயன்

29) சுடலை முத்துவேல்

30) திருநாவுக்கரசு

31) ஜோசப்ராஜன்

32) தங்கம்மாள்

33) மகாவிஷ்ணு ...பிரதிவாதிகள்

**(இ.ம.எண்.197/2009 ன் படி 12.07.2010 ம் தேதியிட்ட உத்தரவுப்படி அசல் வழக்கில் 2 முதல் 33 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டு, இ.ம.எண்.308/2010 ன் படி 15.09.2010 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது.)*

(இ.ம.எண்.391/2013 ல் 05.11.2013 ம் தேதியிட்ட உத்தரவுப்படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது.)

இந்த மேல்முறையீட்டு வழக்கானது, வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் மே.மு.வ.எண்.46/2016 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட நீதிபதி அவர்கள் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் மே.மு.வ.எண்.195/2020 என எண்ணிடப்பட்டு, என் முன்பு 03.08.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது 1 முதல் 19 மற்றும் 21 முதல் 33 வது மேல்முறையீட்டாளர்கள்/குறுக்கு எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. சீனிவாசன்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:02 +0530

அவர்கள் ஆஜராகியும், 20 ம் மேல்முறையீட்டாளர்/20 ம் குறுக்கு எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. S. அமர்ஜிதா அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள்/குறுக்கு மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. இராவணசிவன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாத உரைகளைக் கேட்டும், விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், இதுநாள்வரை என் ஆய்வில் இருந்து வந்த மேல்முறையீட்டு வழக்கு மற்றும் குறுக்கு மேல்முறையீட்டு வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ....

<u>பொதுவான தீர்ப்புரை</u>

இந்த மேல்முறையீட்டு வழக்கானது 27.07.2016 ம் தேதியன்று, அ.வ.எண்.222/2007 ல், நான்குநேரி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 96 கட்டளை 41 விதி 1 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>அசல் வழக்கு எண்.222/2007-ல் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சீர்திருத்தம் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u> :-

தாவா சொத்துக்கள் உட்பட பிற சொத்துக்கள் ஈனமுத்து நாடார் என்பவருக்கு பாத்தியப்பட்டு, அவர் அனுபவம் செய்து வந்து பின்னாளில் காலமாகிவிட்டார். அவருக்கு பின்பு அவருடைய மகன் செல்லத்துரையின் அனுபவத்தில் சொத்துக்கள்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:07 +0530

இருந்தன. செல்லத்துரையும் காலமாகிவிட்டதால் சொக்கலிங்கம் வாரிசு நிலையில் சொத்துக்களை அடைந்து தீர்வை போன்றவற்றை செலுத்தி அனுபவித்து வந்தார். சொக்கலிங்க நாடார் தாவா சொத்துக்களை 03.08.2007 ம் தேதிய ஆவணம் மூலம் இந்த வாதிகளுக்கு நன்கொடையாக கொடுத்துவிட்டார். அதுமுதல் வாதிகள் தாவா சொத்துக்களின் ஏகதேச உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் அதன் அனுபவத்தில் இருந்து வருகின்றனர். வாதிகள் தங்களுடைய பெயருக்கு தீர்வை செலுத்துகின்ற போது அதிகாரிகள் தாவா சொத்துக்கள் சம்பந்தமாக ஈனமுத்து தேவர் பெயர் தவறுதலாக பட்டாவில் இடம் பெற்றுவிட்டதாகவும், அதன் அடிப்படையில் பிரதிவாதி பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். பிரதிவாதியின் தாயார் தாவா சொத்துக்களை பிரதிவாதிக்கு கிரையம் ஏற்படுத்திக் கொடுக்க உரிமை இல்லை. எனவே பிரதிவாதியின் தாயார் 04.01.2007 ல் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. தாவா சொத்துக்களின் மீது தனக்கு உரிமை இல்லை என்றும், தவறுதலாக பட்டாவில் ஈனமுத்து தேவர் என குறிப்பிடப்பட்டுவிட்டது என்பதை அறிந்திருந்தும், பிரதிவாதி தாவா சொத்துக்களில் உள்ள வாதிகளின் அனுபவத்தை இடையூறு செய்ய 07.12.2007 ல் இருந்து முயற்சித்து வருகிறார். அது தடுக்கப்பட்டுவிட்டது. ஒருவார காலத்திற்குள் வாதிகளை தாவா சொத்துக்களில் இருந்து வெளியேற்றப்போவதாக 09.12.2007 ல் இருந்து பிரஸ்தாபித்து வருகின்றனர். அவ்வாறு வெளியேற்றிவிட்டால் வாதிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும். 1 ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:12 +0530

07.09.2007 மற்றும் 20.09.2007ம் தேதிய கிரைய ஆவணங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுக்கு கிரைய ஆவணங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அந்த கிரைய பத்திரங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களின் மீது பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் கிடையாது. வாதிகளுக்கு ஆதரவாக முதல்நோக்கு வழக்கும், சமநிலை வாய்ப்பும் உள்ளது. எனவே தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு ஏகதேச பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், 04.01.2007ம் தேதிய கிரையம் வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்துக்களின் அனுபவ சுவாதீனத்தில் இடையூறு செய்யாமல் பிரதிவாதிகளை தடுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்த தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) <u>1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-</u>

தாவா சொத்துக்கள் இந்த பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாகும். வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே தாவா சொத்துக்களை கிருஷ்ணகுமார் என்பவருக்கு இந்த பிரதிவாதி விற்பனை செய்துவிட்டார். மேற்படி கிருஷ்ணகுமாரின் அனுபவத்தில்தான் தாவா சொத்துக்கள் உள்ளன. பட்டாவில் ஈனமுத்து நாடார் என்பதற்கு பதிலாக ஈனமுத்து தேவர் என தவறுதலாக போடப்பட்டது என்ற விவரம் பொய்யானது. தாவா சொத்துக்கள் ஈனமுத்து தேவருக்கு பாத்தியப்பட்டதாகும். ஈனமுத்து தேவருக்கு 4 மக்கள் உள்ளனர்.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:16 +0530

பிரதிவாதியின் தந்தை மாடசாமியும் ஒரு மகன் ஆவார். அவருடைய காலத்திற்கு பின்னிட்டு பிரதிவாதியின் தாயார் தனது பங்கையும் சேர்த்து இந்த பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார். தாவா சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்திலோ, ஆளுகையிலோ இல்லை. வாதிகள் கோரும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல. எனவே தாவா வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) **2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, மற்ற பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்** :-

பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள 3 மற்றும் 4 ஆவணங்கள் போலியானது என காவல்துறை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. 03.08.2007 ம் தேதிய நன்கொடை ஆவணம் போலியானதாகும். அந்த ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்த சொக்கலிங்க நாடார் தனக்கு சொத்துக்கள் இல்லை என கூறி, முதியோர் பென்ஷன் வாங்கி வந்துள்ளார். எனவே பட்டா எண்.327 ன் படி சொக்கலிங்கத்திற்கு பல ஏக்கர் நிலங்கள் பாத்தியப்பட்டதாக கூறுவது தவறு. பிராது 2, 3 மற்றும் 4 ஆவணங்களை வழங்க ஆவண கண்காணிப்பாளருக்கு அதிகாரம் இல்லை. அந்த ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் பல நபர்களுக்கு கிரையம் செய்யப்பட்டு, அவர்களின் அனுபவத்தில் உள்ளன. தாவா சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இல்லை. சொக்கலிங்க நாடாரின் தகப்பனார் பெயர் செல்லத்துரை அல்ல. செல்லையா ஆகும். பட்டாவில் ஈனமுத்து தேவர் என தவறாக

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:22 +0530

குறிப்பிடப்பட்டுவிட்டது என கூறுவது தவறு. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது. இந்த 2ம் பிரதிவாதி அவற்றை மனைகளாக பிரித்து பல நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். சுவாதீன பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. வழக்கிற்கான வழக்கு மூலம் இல்லை. நீதிமன்ற முத்திரைக்கட்டணம் தவறாக செலுத்தப்பட்டுள்ளது. புல வரைபடத்தை பார்த்து தாவா சொத்துக்களுக்கான எல்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களின் பரப்பளவு மற்றும் எல்கை விவரங்கள் தவறாகும். வாதிகள் சுத்த கையுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே தாவா வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) **<u>1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**:-

ஈனமுத்துவிற்கு செல்லத்துரை என்ற மகன் உண்டு என்பதும், அவருடைய அனுபவத்திற்கு பின்பு செல்லத்துரையின் மகன் சொக்கலிங்கம் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்ததாகவும் கூறுவது தவறு. ஈனமுத்து நாடாருக்கு எத்தனை வாரிசுகள் என்பது பற்றியும், அவர்கள் எப்போது பிறந்து, இறந்து போனார்கள் என்பது பற்றியும் பிராதில் குறிப்பிடப்படவில்லை. ஈனமுத்து நாடாருக்கு செல்லத்துரை மட்டுமே வாரிசு அல்ல. தேவையான தரப்பினரை வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது. சொக்கலிங்கம் வாரிசு நிலையில் தாவா சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்ததாகவும் கூறுவது தவறு. எனவே தாவா

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:28 +0530

வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. எனவே தாவா வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6) **<u>அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு எழுவினாக்கள் வனையப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது :</u>**

1. வாதிகள் தாவா சொத்துக்களின் சட்டப்பூர்வ உரிமையாளர்களா ?
2. பிரதிவாதி பெயரில் உள்ள 04.01.2007ம் தேதிய கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதா ?
3. வாதிகள் தாவா சொத்துக்களின் சட்டப்பூர்வ அனுபவத்தில் இருந்து வருகின்றனரா ?
4. வாதிகள் கோரும் பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா ?
5. இதர பரிகாரங்கள் என்ன?

7) **<u>அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் கீழ்க்கண்டவாறு கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது :</u>**

1. இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளதா ?
2. நீதிமன்ற கட்டணம் குறைவாக செலுத்தப்பட்டுள்ளதா?
3. தபசில் சொத்தின் விவரங்கள் சரியாக உள்ளதா ?

8) **<u>அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் 14.03.2014ம் தேதியில் கீழ்க்கண்டவாறு கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளது</u>**.

1. தாவா வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா ?

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:34 +0530

9) விசாரணை நீதிமன்றத்தில், எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில், வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், பி.சா.1 முதல் பி.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. மேலும், சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) விசாரணை நீதிமன்றத்தால், வாதிகளின் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக் கோரி மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகளால் இந்த மேல்முறையீட்டு வழக்கும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காமல் பிறப்பித்துள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக் கோரி இந்த குறுக்கு மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளால் குறுக்கு மேல்முறையீட்டு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டு வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்களோ அவ்வாறே அழைக்கப்படுவார்கள்.

11) **மேல்முறையீட்டிற்கான காரணங்கள் :-**

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் மாறானது. கீழமை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:39 +0530

சட்டத்தவறும், பொருண்மை தவறும் உள்ளது. விசாரணை நீதிமன்றம், வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 சிட்டாவை தவறுதலாக புரிந்து கொண்டு தபசில் சொத்திற்கான பட்டா ஈனமுத்து நாடார் மகன் செல்லத்துரை நாடார் பெயரில் உள்ளது. எனவே மேற்படி ஆவணத்தை தொடர்ந்து செல்லத்துரை நாடாரின் வாரிசான சொக்கலிங்க நாடார் தாவா சொத்துக்களை 03.08.2007 ல் இந்த வாதிகளுக்கு நன்கொடை கொடுத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படியான ஆவணம் என தீர்மானித்தது ஏற்புடையதல்ல. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டதாக கூறுவது செல்லா நிலையிலான ஆவணமாகும். இதனை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறியுள்ளது. எனவே இந்த மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

12) குறுக்கு மேல்முறையீட்டிற்கான காரணங்கள் :-

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் 3 வது பரிகாரத்தை பொறுத்து சட்டத்திற்கும் நியாயத்திற்கும் மாறானது. கீழமை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் சட்டத்தவறும், பொருண்மை தவறும் உள்ளது. கீழமை நீதிமன்றம் வழக்கெழு வினா 1க்கு வாதிகளுக்கு ஆதரவாக முடிவு செய்துள்ள நிலையில், வாதிகள் உண்மை சுவான்தாரர்களாக உள்ளதால், வாதிகளுக்கு ஆதரவாக உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என முடிவு கண்டு வழக்கு

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:44 +0530

உறுத்துக்கட்டளை பரிகாரம் பொறுத்தும் அனுமதிக்காதது செல்லத்தக்கதல்ல. கீழமை நீதிமன்றம் அனுபவம் என்பது உரிமை மூலத்தின் அடிப்படையிலானது என்ற நிலையில் வழக்கெழு வினா 1க்கு அளித்து வினாவின்பேரில் உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்து உறுத்துக்கட்டளை பரிகாரம் பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக முடிவு காணாதது சட்டப்பொருத்தமற்றது. கீழமை நீதிமன்றம், வாதிகள் தரப்பில் ஆவணங்கள் வழி உரிமை மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில், சாட்சியங்களின் தன்மை பயனற்றுவிட்டது என கொண்டு உறுத்துக்கட்டளை பரிகாரத்தினையும் வாதிகளுக்கு வழங்கி உத்தரவிடாதது சட்டப் பொருத்தமற்றது. கீழமை நீதிமன்றம் சாட்சிய சட்டம் பிரிவு 35-ன் நியதிக்குட்பட்டு வருவாய்த்துறை ஆவணங்கள் அனுபவத்திற்கு அறுதியானது என முடிவு செய்து, வழக்குச் சொத்துக்கள் வாதிகள் அனுபவத்தில் உள்ளது என முடிவு செய்து உறுத்துக்கட்டளை உத்தரவினை வாதிகளுக்கு ஆதரவாக கொண்டு அனுமதித்து உத்தரவிடாதது சட்டப் பொருத்தமற்றது. எனவே இந்த குறுக்கு மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

13) <u>இந்த மேல்முறையீட்டு வழக்கு மற்றும் குறுக்கு மேல்முறையீட்டு வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள்</u> :-

1. பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்டுள்ள 04.01.2007 ம் தேதியிட்ட கிரையம் செல்லத்தக்கதல்ல என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என வாதிகள் கேட்டிருக்கும் விளம்புகை

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:50 +0530

பரிகாரமும், தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்வதன் மூலம் தபசில் சொத்தில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகளோ, வகையறாக்களோ, முகவர்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என வாதிகள் கேட்டிருக்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

2. அசல் வழக்கு எண்.222/2007 ல் 27.07.2016 ல் விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக் கோரி மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கக்கூடியதா?

3. அசல் வழக்கு எண்.222/2007 ல் 27.07.2016 ல் விசாரணை நீதிமன்றத்தால் வாதிகள் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து பிறப்பிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக் கோரி குறுக்கு மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கக்கூடியதா?

14) **<u>பிரச்சனை எண்.1 முதல் 3க்கான தீர்வு</u> :**

முதலாவதாக, மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் இந்த மேல்முறையீட்டில் அடையும் குறைபாடானது, விசாரணை நீதிமன்றம், வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 சிட்டாவை தவறுதலாக புரிந்து கொண்டு தபசில் சொத்திற்கான பட்டா ஈனமுத்து நாடார் மகன் செல்லத்துரை நாடார் பெயரில் உள்ளது. எனவே மேற்படி ஆவணத்தை தொடர்ந்து செல்லத்துரை நாடாரின்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:35:55 +0530

வாரிசான சொக்கலிங்க நாடார் தாவா சொத்துக்களை 03.08.2007 ல் இந்த வாதிகளுக்கு நன்கொடை கொடுத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படியான ஆவணம் என தீர்மானித்தது ஏற்புடையதல்ல. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டதாக கூறுவது செல்லா நிலையிலான ஆவணமாகும். இதனை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறியுள்ளது என்பதாகும்.

15) அடுத்ததாக, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது, தாவா சொத்துக்களான சர்வே எண்.259/1A, 259/A14, 259/A6, 259/A9 ஆகியவைகளின் பட்டா எண்.327 ஆனது ஈனமுத்து நாடார் அவர்களின் மகன் செல்லத்துரை நாடாருக்கு மட்டும் சொந்தம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பட்டா எண்.327 தவிர, மேற்படி செல்லத்துரை நாடாருக்கு இதர சொத்துக்களும் பாத்தியப்பட்டதாக காணப்படுகிறது. எனவே மேற்படி வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை வழங்கிய ஆவண காப்பாளர்கள் சீனிவாசன் மற்றும் சத்தியமூர்த்தி ஆவார்கள். பட்டா, சிட்டா வழங்குவதற்கு வட்டாட்சியர் அவர்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது. எவ்வாறு ஆவண காப்பாளர்கள் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை வாதிகளுக்கு வழங்கியுள்ளார்கள் என்பதை பொறுத்து வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது, வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **“வா.சா.ஆ.2**

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:01 +0530

ஆவணத்தை ஆவண கண்காணிப்பாளர் என்ற அதிகாரி கொடுத்ததுபோல் உள்ளது என்றால் சரிதான். ஆவண கண்காணிப்பாளர் அலுவலகம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தை வழங்கிய அதிகாரியை எனக்கு நேரடியாக தெரியும். ஆவண கண்காணிப்பாளர் என்ற அதிகாரி எந்த ஆவணத்தை பார்த்து வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 கொடுத்தார் என்றால் பழைய அடங்கலை பார்த்து கொடுத்தார். ...... நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2, 3 மற்றும் 4 ஆவணத்தை நான் நேரடியாக திருநெல்வேலியில் ஆவண கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சென்று வாங்கினேன். நான் மேற்படி ஆவணத்தை பெறும்போது விண்ணப்ப மனு எதுவும் கொடுக்கவில்லை. அங்கிருந்த அதிகாரிதான் எனக்கு கொடுத்தார். ...... வா.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்கள் ஒரு சான்றிட்ட நகல் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் கோபுர சீல் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் கையொப்பம் இட்டுள்ள அதிகாரியின் பெயர் ஆர். சீனிவாசன் என உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஆர். சத்தியமூர்த்தி என உள்ளது. மேற்படி 3 ஆவணங்களும் நான் ஒரே தேதியில் தான் பெற்றுக் கொண்டேன்." என சாட்சியமளித்துள்ளார். மேற்படி வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தினை கவனத்தில் கொள்ளும்போது, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை ஒரே தேதியில் பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி மூன்று ஆவண கண்காணிப்பாளர் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை கொடுத்ததாகவும், வா.சா.1 மனு ஏற்படுத்தி

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:06 +0530

கொடுக்காமலேயே வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை ஒரே தேதியில் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களின் உண்மை தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களில் அரசு முத்திரையான கோபுர முத்திரை இல்லை. வா.சா.ஆ.4 ஆவணமானது 1926 ம் ஆண்டிற்குரியது. மேற்படி 1926 ம் ஆண்டில் ஹெக்டேர் அளவுகள் பயன்பாட்டில் இல்லை. ஆனால், மேற்படி ஆவணத்தில் ஹெக்டேர் அளவு குறிக்கப்பட்டு இருக்கிறது. வா.சா.ஆ.3 ஆவணமானது 1920 ம் ஆண்டிற்குரியது. மேற்படி 1920 ம் ஆண்டில் நாணயத்தின் மதிப்பு ரூபாய் மற்றும் அணா என புழக்கத்தில் இருந்துள்ளது. ஆனால், வா.சா.ஆ.3 ஆவணத்தில் ரூபாய் மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும், வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை வழங்கிய ஆவண கண்காணிப்பாளர்கள் சத்தியமூர்த்தி மற்றும் சீனிவாசன் என்பவர்கள் கையெழுத்து செய்ததாக கண்டுள்ளது. ஆகவே, ஒரே தேதியில் இரண்டு ஆவண கண்காணிப்பாளர்கள் பதவியில் இருந்தார்கள் என்பது சந்தேகமாக உள்ளது. மேற்படி ஆவண கண்காணிப்பாளர்கள் முந்தைய ஆவணமான சிட்டா, அடங்கல் பதிவேட்டை பார்த்து வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை வழங்கியதாக வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். வாதிகள் UDR திட்டத்திற்கு முன்பு உள்ள வழக்கிடை சொத்துக்கான அ – பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களின்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:11 +0530

நம்பகத்தன்மையை தெளிவுபடுத்த சம்பந்தப்பட்ட வட்டாட்சியரை விசாரிக்கவில்லை. ஆனால், விசாரணை நீதிமன்றம், வா.சா.1 மற்றும் பி.சா.3 ன் சாட்சியத்தின் அடிப்படையில், வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் என தீர்ப்புரை பக்கம் - 7 ல், பி.சா.3 தன்னுடைய குறுக்கு விசாரணையில், தங்கள் அலுவலகத்தில் இல்லாத ஆவணங்களை ஆவண காப்பாளர் மூலம் நகல் பெறுவது வழக்கம்தான். ஆகவே வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் பி.சா.3 ன் சாட்சியத்திலிருந்து உறுதிபடுத்தியது ஏற்புடையதா? என பார்க்கும்போது, மேற்படி வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை உறுதிபடுத்த வாதிகள் தரப்பில், பி.சா.3 மண்டல துணை வட்டாட்சியர் அழைக்கப்படவில்லை. மாறாக, பிரதிவாதிகள் தரப்பில், தாவா சொத்தான சர்வே எண்.256/6 ஆனது 256/6 ஏ, பி, சி என உட்பிரிவுகளாகி பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்பதை தெளிவுபடுத்துவதற்கு பிரதிவாதிகள்தான் மேற்படி மண்டல துணை வட்டாட்சியரை அழைப்பாணையின்பேரில் விசாரித்துள்ளனர். அப்போது வாதிகள் தரப்பில், சாட்சிக்கு அறிவிப்பு அனுப்பப்படாத ஆவணங்களை பொறுத்து வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை பொறுத்து குறுக்கு விசாரணை செய்தது ஏற்புடையதல்ல. எனவே, மேற்படி ஆவணங்களை குறித்து சாட்சியமளிக்க, வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள்தான் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரை விசாரிக்க வேண்டும். இதுசம்பந்தமாக, பிரதிவாதிகள் தரப்பில் சுட்டிக் காட்டிய, **2014 (4) CTC 471**-ல் கண்ட **Union of India and Others .... Appellants**

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:17 +0530

Vs. Vasavi Co-op. Housing Society Ltd. and others .... Respondents என்ற முன்னோடி தீர்ப்புரையில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

" Suit for Declaration – Title – Whether proved by Plaintiff – In Suit for declaration, Plaintiff to prove title by adducing evidence – Title of Defendant even if not proved, Plaintiff would be non-suited, if he fails to establish his own title – Held, loopholes in Defendant's title would not automatically establish Plaintiff's title – In instant case, mere production of Family Settlement Deed by Plaintiff in which Suit property was not even mentioned, held, would not establish title of Plaintiff – Mere issuance of Patta in favour – Approach of Lower Courts in finding weaknesses in Defendant's case to confer title in favour of Plaintiff, erroneous – Courts ought to have examined genuineness of Plaintiff's case – As title not established by Plaintiff successfully, Suit of declaration and possession, dismissed – Order of Lower Courts decreeing Suit, set aside – Appeal allowed. "

மேற்கண்ட முன்னோடி தீர்ப்புரையை பரிசீலனை செய்யும்போது, வழக்கு தாக்கல் செய்த வாதிகள்தான் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் என்றும், அதனை தொடர்ந்து வாதிகளின் பெயருக்கு ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படியான ஆவணம் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். வா.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், ஆவண கண்காணிப்பாளர் அங்குள்ள அ - பதிவேடை பார்த்து வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 சான்றாவணங்களை வழங்கியதாக சாட்சியமளித்துள்ளார்.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:22 +0530

16) அடுத்ததாக, சாட்சி சான்றாவணங்கள் 1 மற்றும் 2 ஐ பரிசீலனை செய்யும்போது, தாவா சொத்துக்கள் 1974 வரை S.P. பழனியாபிள்ளை என்பவரின் பெயரில் ஏற்பட்டு, அரசாணை 429 ன் படி அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு அனாதி புஞ்சையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக, விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரையில் பக்கம் - 8 ல், 1974 அரசாணை படி தாவா சொத்துக்கள் அனாதி புஞ்சையாக மாற்றம் செய்யப்பட்ட காலம் முதல் 2007 ம் வருட கணினி பட்டா காலம் வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்திற்கு ஈனமுத்து தேவர் பெயரிலோ அல்லது அவருடைய 4 மகன்கள் பெயரிலோ ஏற்பட்டுள்ள எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என விசாரணை நீதிமன்றம் வாதிகள் தாக்கல் செய்த வழக்கை நிரூபிக்கும் சுமை இந்த பிரதிவாதிகளின் மீது சுமத்தியது ஏற்புடையதல்ல. ஏற்கனவே மேற்கோள் காட்டிய முன்னோடி தீர்ப்புரையில் வழக்கு தாக்கல் செய்த வாதிகள்தான் தங்கள் வழக்கை மெய்ப்பிக்க வேண்டும். ஆகவே 1974 ல் அரசாணை 429 ன் படி, தபசில் சொத்துக்கள் அனாதி புஞ்சையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அப்போது ஈனமுத்து நாடாரின் மகன் செல்லையா மற்றும் செல்லையா மகன் சொக்கலிங்கம் ஆகியோர்கள் தாவா சொத்துக்களை அனாதி புஞ்சையாக வகைப்பாடு செய்தபோது எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை. செல்லத்துரை நாடாரை தொடர்ந்து இந்த வாதிகளின் தகப்பனார் சொக்கலிங்கம் நாடாரின் பெயரில் பட்டா ஏற்படவில்லை. செல்லையா நாடார் பெயரில் எந்த வரிவிதிப்பு ரசீதும் பட்டா எண்.327 க்கு ஏற்படவில்லை. அதனை தொடர்ந்து அவருடைய மகனான சொக்கலிங்க நாடாரின்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:27 +0530

பெயரிலும் பட்டாவோ, வரிவிதிப்பு ரசீதோ எதுவும் ஏற்படவில்லை. பி.சா.ஆ.3 ஆவணத்தின்படி, பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு தாவா சொத்துக்களை பொறுத்து பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இந்த வாதிகளின் முன்னோர்கள் தபசில் சொத்துக்களில் தொடர்ந்து அனுபவத்தில் இருந்திருந்தால், பட்டா மாற்றம் சம்பந்தமாக வட்டாட்சியரிடம் முறையீடு செய்யலாம். இதுகுறித்து பிரதிவாதிகள் தரப்பில் சுட்டிக் காட்டிய, 27.03.2024 ம் தேதியிட்ட மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம், **WA.Nos.203 and 205 of 2023** ல் **S. Anbananthan Vs. The District Collector, Perambalur District and others** என்ற வழக்கில் பிறப்பித்த முன்தீர்ப்புரையில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

“ **29.** Right from the independence struggle, there have been demands to reduce the demand of land revenue levied on the ryots. With the increase in other commercial activity and sources of income for the State such as Commercial taxes, registration and stamp duties etc, the land revenue was not increased and ceased to be an important source of Revenue for the State. However, the sovereign duty of the Government remains that the land records are kept up to date. Hence, in the 1970s, though the land revenue was not increased since 1937, nor was there an intention to increase land revenue assessment by way of a re-settlement, the Government introduced a scheme called “Updating of Registry Scheme (UDR)” vide G.O.Ms.No.525, C.T. & R.E. Department, Dated 16.05.1979, to bring the land records up to date. The main objective of the UDR scheme were, a. To convert the acre measurement into metric system in the village accounts.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:33 +0530

b. To transfer the registry to the existing land holders as on date after verifying the documents produced by them and to Sub-divide the fields and transfer the registry to the individual persons if there are joint holders. c. To find out the encroachers in the Government Poramboke and to prepare a list of encroachment.

30. The UDR scheme provided for summary enquiry to ascertain the ownership of lands in the state, appeal mechanism etc.

31. It is seen that UDR was completed in 1987 but the appeals are still being entertained by the District Revenue Officers. It is to be noted that the appeals were being dealt at the level of Tahsildars as late as 2008. It is high time that the Government decides to end the appellate jurisdiction of the executive authorities, and leave any disputes to be resolved in the Civil Courts. "

தாவா சொத்துக்கள் அனாதி புஞ்சையாக அரசு வகைப்பாடு செய்ததை ஏன் வாதிகள் ஆட்சேபணை செய்யவில்லை என்பதற்கு வாதிகள் தரப்பில் எந்த விளக்கமும் இல்லை.

17) அடுத்ததாக, தாவா வழக்கில் இந்த பிரதிவாதிகளின் நிலைபாடானது, தபசில் சொத்துக்களை சொக்கலிங்க நாடார் என்பவர் அனுபவம் செய்து வந்தார் என்பது கற்பனையாகும். அவர் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை. சொக்கலிங்க நாடார் தபசில் சொத்துக்களுக்கு எந்த தீர்வையும் செலுத்தியது கிடையாது. தபசில் சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, அவருடைய தாயார் நாச்சியார் 04.01.2007 ல் 1ம் பிரதிவாதிக்கு வழக்கு காலத்திற்கு முன்பாகவே கிரையம் கொடுத்துள்ளார். பின்பு தபசில் சொத்துக்களை

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:38 +0530

2ம் பிரதிவாதிக்கு 07.09.2007ல் 1ம் பிரதிவாதியால் கிரையம் கொடுக்கப்பட்டது. அன்றிலிருந்து தபசில் சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது. வாதிகளும், வாதிகளின் முன்னோர்களும் தபசில் சொத்தின் அனுபவத்தில் இல்லை. 14.08.1963ம் தேதியிட்ட செல்லையா நாடாரின் குமாரர் சொக்கலிங்கம் அவரது மனைவி ராஜமணி அம்மாளுக்கு எழுதி கொடுத்த நன்கொடை ஆவணம் பி.சா.ஆ.2 ஆகும். மேற்படி பி.சா.ஆ.2 ஆவணத்தில் செல்லையா நாடாரின் குமாரர் சொக்கலிங்கம் அவரது மனைவி ராஜம்மாளுக்கு எழுதிக் கொடுத்த விடுதலை ஆவணத்தில் சொக்கலிங்கத்தின் தகப்பனார் பெயர் செல்லையா நாடார் என்றுதான் உள்ளது. மாறாக, செல்லத்துரை நாடார் என்று இல்லை. ஆனால், சொக்கலிங்க நாடார் வாதிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ.1ல் செல்லத்துரை நாடாரின் மகன் சொக்கலிங்க நாடார் என திருத்தி எழுதப்பட்டு இருக்கிறது. அதனை பொறுத்து விசாரணை நீதிமன்றம் யூகத்தின் அடிப்படையில் தீர்மானித்தது ஏற்புடையதல்ல. இதுசம்பந்தமாக, விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரையில் பக்கம் - 10ல், பொதுவாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் அரசாங்க ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக கருதி, செல்லத்துரை நாடார் மகன் சொக்கலிங்க நாடார் என்பது செல்லையா நாடார் மகன் சொக்கலிங்கம் என தவறாக ஏற்பட்டதாக யூகத்தின் அடிப்படையில் முடிவு செய்தது ஏற்புடையதல்ல. அரசு ஆவணங்களில் செல்லையா நாடாரின் மகன் சொக்கலிங்கம் என்றுதான் உள்ளது. மாறாக, செல்லத்துரை நாடாரின் மகன் சொக்கலிங்கம் என்று

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:43 +0530

எந்த ஆவணங்களும் இல்லை. மேற்படி செல்லையா நாடார் தனது மனைவிக்கு 1963 ம் தேதியில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணமான பி.சா.ஆ.2 லிலும் செல்லையா நாடாரின் குமாரர் சொக்கலிங்கம் என்றுதான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். ஆகவே, செல்லையா நாடாருக்கு செல்லத்துரை நாடார் என்ற பெயர் ஒற்றுமை இருப்பதாக வாதிகள் தெளிவுபடுத்தவில்லை. தற்போது தாவா சொத்துக்குரிய பட்டா பி.சா.ஆ.3 ன் படி பட்டா எண்.1224 ஆனது 25.02.2008 ம் தேதியில் ஈனமுத்து தேவரின் மகன் செல்லத்துரை என்பவருக்கும், மாடசாமி மகன் முத்துப்பாண்டி என்பவருக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதனை பொறுத்து வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது, வா.சா.1 ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, "**வா.சா.ஆ.8 ஆவணம் 13.08.2015 ல்தான் நகல் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் அடிப்படையில் சொத்து மாடசாமி மகன் முத்துப்பாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ..... மாடசாமி தேவரின் மனைவி நாச்சியார் என்றால் சரிதான். மேற்படி மாடசாமி தேவரின் மகன் பெயர் முத்துப்பாண்டி என்றால் சரிதான். முத்துப்பாண்டியின் சகோதரர் இறந்துவிட்டார். மேற்படி நாச்சியாரும், மகன் முத்துப்பாண்டிக்கு தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.**" என பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 கிரைய ஆவணங்களை ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி பி.சா.ஆ.4 கிரைய ஆவணம் 09.07.2007 ம் தேதியிட்டது. பி.சா.ஆ.5 கிரைய ஆவணமானது 20.07.2007 ம் தேதியிட்டது. மேலும், சொக்கலிங்க நாடாரின்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:48 +0530

தகப்பனார் பெயர் செல்லையா நாடாரா? அல்லது செல்லத்துரை நாடாரா? என சந்தேகம் எழுகிறது. இதுசம்பந்தமாக, வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது, வா.சா.1 ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **"2006 ம் வருட ஊராட்சி வாக்காளர் பட்டியலில் எனது மாமனார் பெயர் சொக்கலிங்கம் நாடார் எனவும், அவரது தகப்பனார் செல்லையா நாடார் என்றும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டது. தபசில் சொத்திற்கும், எனது மாமனாரின் தகப்பனாருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல."** என சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது, செல்லையா நாடாரின் மகன் சொக்கலிங்க நாடார் என்றுதான் உள்ளது. மாறாக, செல்லத்துரை நாடார் என வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதப்பட்டு இருப்பதை பார்க்கும்போது, பி.சா.ஆ.3 பட்டாவில் கண்ட பெயர் ஒற்றுமையை வைத்து வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள சொக்கலிங்க நாடார் அவரது மனைவிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பி.சா.ஆ.2 ல் செல்லையா நாடார் மகன் சொக்கலிங்க நாடார் என்றுதான் 1963 ம் வருட பி.சா.ஆ.2 ஆவணம் தெளிவுபடுத்துகிறது. பி.சா.ஆ.3 பட்டாவில் உள்ள பெயர் ஒற்றுமையை கருத்திற்கொண்டு, வா.சா.ஆ.1 ஆவணம் செல்லத்துரை நாடாரின் மகன் சொக்கலிங்க நாடார் என பெயர் திருத்தம் ஏற்பட்டுள்ளது. இதனை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளாமல், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் என தீர்மானித்து, தபசில் சொத்துக்களை பொறுத்து வாதிகள்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:53 +0530

கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வழங்கியது ஏற்புடையதல்ல. 1ம் பிரதிவாதி பெயருக்கு 04.01.2007 ல் ஏற்பட்ட கிரைய ஆவணம் செல்லா நிலையிலானது என வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே, விசாரணை நீதிமன்றம் விளம்புகை பரிகாரத்தை பொறுத்து வழங்கிய தீர்ப்புரையும், தீர்ப்பாணையும் ரத்து செய்து, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு

18) குறுக்கு மேல்முறையீட்டாளர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். விசாரணை நீதிமன்றம், வழக்கிடை சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், பிறகு வழக்கிடை சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இல்லை என வாதிகள் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி ஆகியுள்ளதால் குறுக்கு மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளுக்கு 27.07.2016 ல் பிறப்பித்துள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையினால் எந்த பலனும் கிடைக்கவில்லை. ஆகவே, வழக்கிடை சொத்துக்கள் தங்கள் அனுபவத்தில் இருக்கிறது என விசாரணை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். விசாரணை நீதிமன்றத்தில் வருவாய்துறை ஆவணங்கள் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை விசாரணை நீதிமன்றம் சரியாக பரிசீலனை செய்யவில்லை. ஆகவே, வழக்கிடை சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என தீர்மானம் ஆகியுள்ள நிலையில், வழக்கிடை சொத்துக்கள் வாதிகளின்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:36:59 +0530

அனுபவத்தில் இருப்பதாக கருதி வாதிகளுக்கு ஆதரவாக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி இருக்க வேண்டும். விசாரணை நீதிமன்றம் 27.07.2016 ல் வாதிகள் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்ததை ரத்து செய்து, இந்த குறுக்கு மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டும் என்பதாகும். ஏற்கனவே, மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மேல்முறையீடு 195/2020 அனுமதிக்கப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் வாதிகளும், பிரதிவாதிகளும் பட்டாவின் அடிப்படையில் உரிமை கோரும்போது, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 பட்டா உண்மையான பட்டா அல்ல. பி.சா.ஆ.3 பட்டா சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அவர்களால் வழங்கியது. எனவே பி.சா.ஆ.3 பட்டாவின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் பெற்ற கிரையம் சட்டப்படியான கிரையமாகும். வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் அல்ல என்பதால், அதனை அனுசரித்து வாதிகளின் பெயரில் வாதிகளின் தகப்பனார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ.1 சட்டப்படியான ஆவணம் இல்லை என்பதால், வழக்கிடை சொத்துக்கள் சம்பந்தமாக வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானித்துள்ளது. தற்போது விசாரணை நீதிமன்றம், வாதிகள் வழக்கிடை சொத்துக்களின் அனுபவத்தில் இல்லை என தீர்மானித்து வாதிகள் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்தது சீராய்வுக்கு உட்பட்டதா? என பரிசீலனை செய்யும்போது, விசாரணை நீதிமன்றத்தில்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:04 +0530

வாதிகளின் தகப்பனாரின் தகப்பனார் செல்லையா நாடாரா? அல்லது செல்லத்துரை நாடாரா? என்ற முரண்பாட்டை வாதிகள் தெளிவுபடுத்தவில்லை. 1963 ம் தேதியிட்ட ஆவணத்தில் சொக்கலிங்க நாடார் தனது மனைவிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் செல்லையா நாடாரின் மகன் சொக்கலிங்க நாடார் என்றுதான் எழுதப்பட்டுள்ளது. அதன்பிற்பாடும் 08.03.2007 ம் தேதியில் எழுதிய வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் செல்லத்துரை நாடாரின் மகன் சொக்கலிங்க நாடார் என எழுதப்பட்டுள்ளது. வட்டாட்சியர் வழங்கிய பி.சா.ஆ.3 ஆவணத்தினை பரிசீலனை செய்யும்போது, பட்டா எண்.1244 ஆனது ஈனமுத்து தேவர் மகன் செல்லத்துரை என கண்டுள்ளது. மேற்படி பட்டா நாங்குநேரி வட்டாட்சியர் அவர்களால் வழங்கியதாகும். மேற்படி பட்டா 25.02.2008 ல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தாவா சொத்துக்கள் சர்வே எண்.256/6 ஆனது 256/6 ஏ, பி, சி என உட்பிரிவுகளாகி பிரதிவாதிகளின் பெயரில் பட்டா எண்.1922 மற்றும் பட்டா எண்.1443 ஆகியவைகள் ஏற்பட்டுள்ளதாகவும், மண்டல துணை வட்டாட்சியர் தெளிவுபடுத்தியுள்ளார். இதுசம்பந்தமாக, வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது, வா.சா.1 ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **“சர்வே எண்.259/10 ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர், 24 செண்ட் ஆகும். வா.சா.ஆ.1, 2, 3 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. அதில் புல எண்.326, 256, 327, 328 ஆகிய சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி**

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:10 +0530

புல எண்ணில் என்ன பயிர் வைக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் எனக்கு தெரியாது. அதைபோல் மேற்படி சர்வே எண்களில் உள்ள சொத்துக்கள் எப்போது கைமாறியது என்பது பற்றியும் எனக்கு தெரியாது. யாரால் கொடுக்கப்பட்டது என்பது பற்றியும் எனக்கு தெரியாது." என சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது, வழக்கு தாக்கல் செய்த வாதிகள்தான் வழக்கிடை சொத்துக்கள் தங்களுடைய அனுபவத்தில் இருக்கிறது என்பதை தெளிவுபடுத்த வேண்டும். ஆகவே, தபசில் சொத்துக்கள் பல்வேறு உட்பிரிவுகளாகி பிரதிவாதிகளின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருவதை வாதிகள் தெரியாது என சாட்சியமளித்திருப்பது ஏற்புடையதல்ல. வழக்கிடை சொத்துக்கள் சம்பந்தமாக பட்டா எண்.327 ஆனது ஈனமுத்து தேவர் மகன் செல்லத்துரை பெயரில் தவறுதலாக பட்டா ஏற்பட்டிருந்தால், வழக்கிடை சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இருந்திருந்தால், உடனே வாதிகள் வழக்கிடை சொத்துக்கள் சம்பந்தமாக பிரதிவாதிகள் பெயரில் தவறுதலாக பட்டா ஏற்பட்டுள்ளது என மேல்முறையீடு செய்து இருப்பார்கள். ஆகவே, வழக்கிடை சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் இருக்கிறது என வாதிகளுக்கு தெரியாமல் வாதிகள் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டிருப்பது ஏற்புடையதல்ல. மேலும், வழக்கிடை சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் இருக்கிறது என்பதை பொறுத்து வா.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், **"தாவா சொத்தில் வரிசையாக பிளாட்டுகள் போடப்பட்டுள்ளது. வழக்கில் கண்ட பிரதிவாதிகள் அந்த பிளாட்டுகளை வாங்கியிருக்கிறார்கள் என்றால்**

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:14 +0530

சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே ஏசுவடியாள் நாடாத்தி இடமும், மேற்கே ராமச்சந்திரன் மோகன் இடமும் உள்ளது. அதில் அவர் பிளாட் போட்டிருக்கிறார். தெற்கே பழனியாப்பிள்ளை இடம் உள்ளது. கிழக்கே 20 அடி ரோடு உள்ளது. மேற்படி நான்கு எல்லைக்குள் தான் பிராது தபசில் சொத்துக்கள் உள்ளது. மேற்படி நான்கு எல்லைக்கு உட்பட்ட இடத்தில் யாரும் வீடு கட்டவில்லை. தாவா சொத்திற்கு எந்த பகுதியில் புல எண்.268 ஏ உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராமச்சந்திரன் மோகன் சர்வே எண்.259 உள்ள உட்பிரிவுகளில் உள்ள சொத்தை அனுபவித்து வருகிறார்." என சாட்சியமளித்துள்ளதை கவனத்தில் கொள்ளும்போது, தபசில் சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இல்லை. வழக்கிடை சொத்துக்கள் சம்பந்தமாக இந்த பிரதிவாதிகள் எந்த தேதியில் வழக்கிடை சொத்துக்களை ஆக்கிரமித்தார்கள் என்பதை வாதிகள் வழக்குரையில் குறிப்பிடவில்லை. மேலும், வழக்கிடை சொத்துக்களை வாதிகளோ, வாதிகளின் தகப்பனாரோ அல்லது வாதிகளின் தாத்தாவோ அனுபவித்ததற்கு நம்ப தகுந்த ஆவணங்கள் இல்லை. வா.சா.1ன் குறுக்கு விசாரணையில், தனது மாமனாருக்கு சொந்த வீடு இருந்தது. அவரது கடைசி காலத்தில் தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் இல்லை. எல்லாவற்றையும் விற்றுவிட்டார் என சாட்சியமளித்துள்ளதை பார்க்கும் போது, வா.சா.1ன் மாமனார், வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களில் கண்ட சொத்துக்களை தவிர, இதர சொத்துக்களை கிரையம் கொடுத்தாரா? என்பதையும் தெளிவுபடுத்தவில்லை. வழக்கிடை சொத்துக்கள் வாதிகளின் தகப்பனாரோ,

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:20 +0530

வாதிகளின் தாத்தாவோ, ஈனமுத்து நாடாரோ அனுபவித்ததற்கு எந்த ஆவணமும் இல்லை. வழக்கிடை சொத்துக்களை பொறுத்து வாதிகளின் அனுபவத்தில் இல்லை என விசாரணை நீதிமன்றம் தீர்மானித்து, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்தது ஏற்புடையது.

19) அடுத்ததாக, இந்த குறுக்கு மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள், இடைநிலை மனு எண்.1/2024 ஐ தாக்கல் செய்து, வழக்கிடை சொத்துக்கள் தங்களுடைய அனுபவத்தில் இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதற்கு கூடுதல் ஆவணங்களில், 1வது ஆவணமாக பட்டா எண்.2056 பதிவிறக்கம் செய்யப்பட்டது. 2வது ஆவணமாக 1426ம் பசலிக்குரிய எண்.2-ம், 3வது ஆவணமாக 1432ம் பசலிக்குரிய எண்.2 ம், 4 வது ஆவணமாக 1426 ம் பசலிக்குரிய தீர்வை - 2 எண்ணமும், 5 வது ஆவணமாக 1427 ம் பசலிக்குரிய தீர்வை - 2 எண்ணமும், 6 வது ஆவணமாக 1428 ம் பசலிக்குரிய தீர்வை - 2 எண்ணமும், 7 வது ஆவணமாக 1430 ம் பசலிக்குரிய தீர்வை - 2 எண்ணமும், 1432 ம் பசலிக்குரிய தீர்வை 4 எண்ணமும் கூடுதல் ஆவணங்களாக இந்த குறுக்கு மேல்முறையீட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என்பதாகும். ஏற்கனவே விவாதித்ததுபோன்று வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 சட்டப்படியான பட்டாக்களாக கருத முடியாது. அதனை தொடர்ந்து வாதிகள் பெயருக்கு ஏற்பட்ட வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படியான ஆவணங்களாக கருத முடியாது. மேற்படி ஆவணங்களின் தொடர்ச்சியாக ஏற்பட்ட தீர்வை ரசீதுகளும் சட்டப்படியான ஆவணங்களாக கருத

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:25 +0530

முடியாது. தபசில் சொத்துக்கள் சம்பந்தமாக, ஈனமுத்து நாடார் பெயரிலுள்ள வரிவிதிப்பு ரசீதோ, செல்லையா நாடாரின் பெயரிலுள்ள வரிவிதிப்பு ரசீதோ, சொக்கலிங்க நாடாரின் பெயரிலுள்ள வரிவிதிப்பு ரசீதோ தாக்கல் செய்யாமல், தற்போது சட்டத்திற்கு புறம்பான ஆவணங்களை பயன்படுத்தி ஏற்பட்ட வரிவிதிப்பு ரசீதுகளை இந்த மேல்முறையீட்டில் குறியீடு செய்வதால் வாதிகளுக்கு எந்த பலனும் கிடைக்க வாய்ப்பு இல்லை. ஏற்கனவே, விசாரணை நீதிமன்றத்தில் பயிரிடும் கணக்கு பசலி 1388 முதல் 1415 வரை வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்யும்போது, மண்டல துணை வட்டாட்சியர் அவர்களால் ஈனமுத்து மற்றும் செல்லத்துரை பெயரில்தான் அடங்கல் பதிவேடு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஈனமுத்து மற்றும் செல்லத்துரை அல்ல என்றும், ஈனமுத்து மகன் செல்லையா நாடார் என்பதை வாதிகள் விசாரணை நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தாததால், மேற்படி அடங்கல் பதிவேடை இந்த மேல்முறையீட்டில் குறியீடு செய்வதால் எந்த பலனும் வாதிகளுக்கு கிடைக்கப்போவது இல்லை என்பதால், இடைநிலை மனு எண்.1/2024 தள்ளுபடி செய்யப்படுகிறது.

20) அடுத்ததாக, மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள், இந்த மேல்முறையீட்டில் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேள்விகள் 1, 2 ஐ திருநெல்வேலி மாவட்ட வருவாய்துறை ஆவண காப்பகம் செயல்பாட்டிற்கு உள்ளதா? இல்லையா? என கேட்ட கேள்விக்கு தகவல் ஆணையம் ஆவண கண்காணிப்பாளர் என்ற பதவி கிடையாது என வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும்

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:31 +0530

வா.சா.ஆ.4 ஐ வழங்கிய அதிகாரி கிடையாது என சான்று வழங்கியுள்ளதை இந்த மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டும் என்பதாகும். விசாரணை நீதிமன்றத்தில், வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் ஆவண கண்காணிப்பாளர் வழங்கியதாகும். பட்டா, சிட்டாகளை வட்டாட்சியர் மட்டுமே வழங்க முடியும். வட்டாட்சியர் அவர்கள் ஈனமுத்து நாடார் மகன் செல்லையா நாடாருக்கு எந்த பட்டாவும் வழங்கவில்லை. செல்லத்துரை என்ற பெயருக்கு வட்டாட்சியரால் வழங்கப்பட்டு, அடங்கல் பதிவேடும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் என்பதை வாதிகள் தெளிவுபடுத்தவில்லை. எனவே, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் இல்லை என தீர்மானித்த பிறகு, மாவட்ட ஆட்சியர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் செட்டில்மெண்ட், சிட்டா ஆவணங்கள் பராமரிக்கப்படவில்லை. ஆவண காப்பகத்தில் இருந்து வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் வழங்கப்படவில்லை என தகவல் கொடுத்ததை இந்த மேல்முறையீட்டில் குறியீடு செய்வதால் எந்த பலனும் இல்லை. விசாரணை நீதிமன்றத்தில் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்ய வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்த மனு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானித்து, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இறுதியாக, மேல்முறையீடு 195/2020 ஆனது விசாரணை நீதிமன்றத்தில், வழக்கிடை சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ததை ரத்து செய்தும், விசாரணை நீதிமன்றம் வழக்கிடை

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:37 +0530

சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இல்லை என உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்ததை உறுதி செய்தும், இந்த குறுக்கு மேல்முறையீடு தள்ளுபடி செய்தும், மேல்முறையீடு வழக்கு எண்.195/2020 அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21) முடிவாக, இந்த மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கு எண்.222/2007 ல் நான்குநேரி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 27.07.2016 ம் தேதியில் பிறப்பித்த வழக்கிடை சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ததை ரத்து செய்தும், 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள 04.01.2007 ம் தேதிய கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்ததை ரத்து செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, அசல் வழக்கு எண்.222/2007 ல் நான்குநேரி, கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 27.07.2016 ம் தேதியில், நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டு பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:42 +0530

இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில்

அவையறிய பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:48 +0530

சார்பு நீதிபதி

நான்குநேரி

<u>சாட்சி விபரங்கள்</u> :-

மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சிகள்	-	இல்லை
மேல்முறையிட்டாளர்கள் தரப்பு சான்றாவணங்கள்	-	இல்லை
எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சிகள்	-	இல்லை
எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சான்றாவணங்கள்	-	இல்லை
குறுக்கு மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சிகள்	-	இல்லை
குறுக்கு எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சிகள்	-	இல்லை

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:37:53 +0530

சார்பு நீதிபதி

நான்குநேரி

<u>நகல்</u> :

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

நான்குநேரி.

சார்பு நீதிமன்றம்

நான்குநேரி

மே.வ.எண்.195/2020

நேரிய/வரைவு தீர்ப்புரை

நாள் -17.08.2026